8இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2017–18

## தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org
தொலைபேசி எண்: 04254–297981

நாள் 18.01.2018

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் யானைகள் வழக்கம்போல் நடைபயிற்சி மேற்கொண்டு பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள்உண்டு தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின.

பசுந்தீவனம், சாத உருண்டைகள், கேழ்வரகு களி, பச்சைப்பயிறு ஆகியவற்றுடன் உடலுக்கு வலுவூட்டும் சத்து மாத்திரைகள் ஆகியவற்றை உட்கொண்ட யானைகள் மாலையிலும் வழக்கம் போல் நடைபயிற்சி செய்து நீராடி தத்தம் இடங்களுக்குச் சென்று ஓய்வெடுக்கத் தொடங்கின.

நல்லெண்ண அடிப்படையில் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அரசு விழாக்களில் கலை நிகழ்ச்சி நடத்தி வரும் ரஷ்ய நாட்டு கலாச்சார குழுவினர் முகாமிற்கு இன்று காலை வருகை தந்து யானைகளின் நடைபயிற்சி, உணவு முறை மற்றும் மருத்துவ சிகிச்சை விவரங்களை நேரில் பார்த்தும் அறிந்தும் வியப்பில் ஆழ்ந்தனர். தமிழக அரசின் இந்த சீர்மிகு திட்டத்திற்கு மிகுந்த பாராட்டு தெரிவித்தனர்.





